விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 015 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 18 புதன்கிழமை (03.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## சிலிண்டர் வெடித்ததில் தீ விபத்து இரு சகோதரர்கள் உடல் கருகிப் பலி

- பருத்தித்துறை முனைப் பகுதியில் சம்பவம்
- நீதவான் சம்பவ இடத்தில் விசாரணை

வடமராட்சி பருத்தித்துறை முனைப் பகுதியில் சிலிண்டர் வெடித்ததில் தீ விபத்தில் கண்டியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


ரெஜிபோம், பிளாஸ்ரிக், கடற்றொழில் உப 15


## தமிழின் பெருமையைக் கூறாமல் இருக்க முடியாது

# தமிழ்ப் பண்பாட்டை பேசாத நாளே இல்லை

### பாரதப் பிரதமர் நரேந்திர மோடி



(திருச்சி)

தமிழ் மொழியின் பெருமையைக் கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை. தமிழ்ப் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை என பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் வடக்கு வருகையை முன்னிட்டு

### அமைச்சர் டக்ளஸ் – ஆளுநர் தலைமையில் முன்னாயத்தம்

(வவுனியா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் விஜயமாக நாளை 4ஆம் திகதி வடக்கு மாகாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின்போது விசேட மாவட்ட அபிவிருத்தி குழுக் 15

### ஜனாதிபதி யாழ்.வருகை

## தடையுத்தரவு கோரி 8 பேருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்யவுள்ள நிலையில் அதற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என கருதி எட்டு பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 15

### வடமராட்சியில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவிலுள்ள நித்திய வெட்டை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது. 15

## போதைப்பொருளை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்க

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனை மற்றும் அது தொடர்பான கடத்தல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய போதைப் பொருள் தடுப்புக் 15

## புத்தாண்டு பலன்கள் நாளை முதல் உங்கள் வலம்புரியில்

வாசிக்கத் தவறாதீர்கள்

## மருந்துகளின் விலை அதிகரிக்கும் அபாயம்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

பெறுமதிசேர் வரி அதிகரிப்பினால் மருந்துகளின் விலை 25% அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக மருந்துப் பொருட்கள் மற்றும் சுகாதார உபகரணங்களின் விலை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயந்த பண்டார 15

### அதிகரிக்கப்பட்ட வரியால்

## குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளும் நிலையில் நாட்டு மக்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கம்பஹா)

அரசாங்கத்தின் அதிகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியால் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளும் நிலையில் நாட்டு மக்கள் உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரி பதிவு செய்வது கட்டாயம்

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

(கொழும்பு)

பெப்ரவரி முதலாம் திகதி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரிக்காக பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அனைவரும் வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேல் ஊதியம் பெறுவோர் மாத்திரம் இந்த வரிக்கொள்கைக்கு உட்பட்டவர்கள் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நடைமுறைக்கணக்கொன்றை ஆரம்பிக்கும் போதும், கட்டட நிர்மாணத்திற்கு அனுமதிகோரும் போதும், மோட்டார் வாகனமொன்றை பதிவு செய்யும் போதும், உரிமத்தை புதுப்பித்தல் மற்றும் காணி உரிமையைப் பதிவு செய்தலின் போதும் வரி செலுத்துனர் அடையாள இலக்கம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

WWW.IRE.GOV.LK எனும் இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் மூலம் 18 வயதிற்கு மேற்பட்டோர், வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும். (ம-7)

மூலப்பொருட்களை மானிய விலையில் வழங்கினால்

# அதிகரிக்கப்பட்ட உணவுகளின் விலை குறைக்கப்படலாம்

(கொழும்பு)

உணவு தயாரிப்புக்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை மானிய முறையில் வழங்கப்பட்டால் உணவுப் பொருட்களின் விலை குறைவடையும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்சான் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உணவகங்களில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான உணவு வகைகளின் விலையும் நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொத்து, ப்ரைட் ரைஸ் மற்றும் மதிய உணவுப் பொதி, தேநீர் உள்ளிட்டவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சிற்றுண்டிகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், உணவு தயாரிப்புக்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டால் உணவுப் பொருட்களின் விலையை குறைக்க முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நடைமுறைக்கு வரும் வகையில் எரிவாயுவின் விலை மற்றும் நீர்க் கட்டணங்கள் உள்ளிட்டவை அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வரியின் பெறுமானம் எதிர்காலத்தில் குறையும்

## நிதி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் அனைவரும் வரி கட்டும் போது நாங்கள் செலுத்தும் வரியின் அளவு குறையும் என நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அனைவரும் ஒன்றிணைந்து முறையாக வரி செலுத்தினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். தற்போதைய கால கட்டம் கடினமான ஒரு கால கட்டம்.

மாத சம்பளத்தை ஒரேயடியாக கொடுக்க முடியாத காலம் இருந்தது. அவ்வளவு கஷ்டமான காலம். டொலர்கள் இல்லாமல் துறைமுகத்தில் கப்பல்கள் முடங்கின. அந்த நிலையை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாங்கள் அமைத்த அடித்தளம் வருங்காலத்தில் வலுப்பெறும். நானும் கஷ்டமான காலத்தை அனுபவித்து வருகிறேன்.

என் மகன் வரி விதிப்பு பற்றி என்னிடம் குறை கூறினான். அவ்வளவு வரி செலுத்த நான் என்ன தவறு செய்தேன் என்று கேட்டான். நான் சொன்னேன், உன் பிரச்சினை எனக்கு புரிகிறது.

ஆனால் நாட்டில் பிரச்சினை உள்ளது. அந்த பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்பது நம் கடமை. எல்லோரும் சேர்ந்து வரி கட்டுகிறோம். எதிர்காலத்தில் அனைவரும் வரி கட்டும் போது நாங்கள் செலுத்தும் வரியின் அளவு குறையும் என்றேன் என குறிப்பிட்டார். (ம-7)

# தட்டம்மையை கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

## அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

தற்போது நாட்டில் மீண்டும் பரவ ஆரம்பித்திருக்கும் தட்டம்மை நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் நாடுமுழுவதுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

தட்டம்மை நோயை ஒழித்துள்ள நாடாக உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையை அடையாளங்கண்டுள்ளது. ஆனால் கடந்த வருடம் சுமார் 700 அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சில காரணங்களால், தட்டம்மை நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு குறைவாக உள்ளதால் தற்போது நாட்டில் மீண்டும் தட்டம்மை நோய் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. எனவே, இந்த நிலையை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதன்படி, ஜனவரி மாதம் இரண்டாவது வார்த்தில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஊடாக நோய்த்தடுப்பு தடுப்பூசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தட்டம்மை நோயை தடுக்கும் வகையில் குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோரை கேட்டுக் கொள்கிறோம் என்றார். (ம-7)

# ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலே

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுத்தப்படுவார் என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் உள்ள தலைவர்களில், சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள, சந்தேகமில்லாமல் தீர்மானங்களை எடுக்கும் அனுபவமுள்ள தலைவராக ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே உள்ளார்.

ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 25 வருடங்களின் பின்னர் நாட்டின் தேசிய வருமானம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# 45ம் நாள் நினைவஞ்சலி



ஜனாதிபதி விருது பெற்ற
மாமனிதன் கலாபூஷணம்

அமரர் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)

அவர்கள் அமரத்துவம் அடைந்த 45ஆம் நாளில் நினைவுகூருவதில் மன நிறைவு அடைகின்றோம். அவர் இந்நாளில் அன்றி எந்நாளும் எங்கள் நினைவில் நின்று நீங்காதவர்.

நாடகக் கல்வியின் மூத்தமகன், வீரமைந்தனாக பண்பட்ட நடிப்பில் பண்டாவாக.... மேலும் பல அவர் நடிப்பைக் கண்டு வியந்துள்ளோம். எமது அருமை நண்பனின் தந்தையாகிய உம்மை நாமும் உள்ளத்தால் தந்தையாக நேசித்தோம்.

உங்கள் பாசத்துக்குரிய குடும்பம் ஆறுதலடையவும் உங்கள் ஆத்மா சாந்தியடையவும் நாம் தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம் :
{ராணி, சிவா, கிருபா} (லண்டன்)
ரதி (கனடா)

(18462)

# மரண அறிவித்தல்

## லோகநாதன் சபேஸ்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் சபேஸ் அவர்கள் கடந்த (30.12.2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் லோகநாதன் - சாரதாதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும் வசந்தராசா - மகாலட்சுமி (நாவற்குழி) தம்பதியரின் அன்பு மருமகனும் மயூரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சதீஸ், தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜீவன் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மைத்துனரும் அங்கயன், தர்ஷணன் அவர்களின் அன்பு மாமனும் மதுஷன், மதுஷா அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய் மற்றும் புதன்கிழமை 3.00pm - 4.00pm வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை (04.01.2024) 12.15 pm - 1.30 pm வரை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Address: Crematorium Les Jon cherolles Villeraneuse
95, RUE MARCEL SAMBAT
93430 Villetaneuse

இராஜேஸ்வரன் - 33751219094
லோகநாதன்(ராசு) - 076 336 9386
மனைவி - 0033990912
ஜீவன் - 33610935361

நீர்வேலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(18480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் குதிக்கும் மின்சாரசபை ஊழியர்கள்

(கொழும்பு)

**மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக இன்று முதல் மூன்று நாள் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான சட்ட மூலத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு மின்துறை அமைச்சருக்கு அறிவிக்கவுள்ளதாக அதன் பிரதம செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.


ஜனாதிபதி ரணிலுடன் சேர்ந்து விற்பனை செய்ய அமைச்சர் காஞ்சன விரும்புகிறார்.

இதை பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக நிறைவேற்றினால் இலங்கை மின்சாரசபையில் பாரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்.

இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக மூன்று நாட்களுக்கு மாபெரும் போராட்டம் நடத்த ஏகமனதாக தீர்மானம் எடுத்துள்ளோம்.

பாராளுமன்றத்திற்கு இதை கொண்டு வந்தால் அன்றைய தினம் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அனைவரையும் கொழும்புக்கு வரவழைப்போம் என அமைச்சர் காஞ்சனவுக்கு பகிரங்க சவால் விடுக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# நீண்ட நாட்களின் பின் பொதுவெளியில் கோட்டா



(கொழும்பு)

நீண்ட நாட்கள் பொது வெளிக்கு வருகை தராத முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள விகாரை யொன்றுக்கு தனது குடும்ப சகிதம் வருகை தந்திருந்தார்.

2024 ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில் ஆசிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் அவரும் அவரது குடும்பத்தினரும் கொழும்பிலுள்ள கங்காராமய விகாரைக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் ஆண்டு விழாவிலும் கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இனவாதத்தை தூண்ட இடமளிக்கக் கூடாது

## நீதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

மதம், மொழி, இன வர்க்கமாக பிளவுபட்டு செயற்பட்டால் நாடு என்றவகையில் நாங்கள் எதிர்பார்க்கும் இலக்குக்கு செல்ல முடியாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதை நாம் அறிவோம். அடுத்து எந்த மாதிரியான தேர்தல் வந்தாலும் இன, மத, மொழிப் பிரிவினையை உருவாக்க சுயநல, சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது. எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் கீழ் நிலைக்கு வீழ்ச்சியடைந்து நாங்கள் தற்போது பொருளாதாரத்தை கட்டியெழுப்பி சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# தன்னிச்சையாக விலையை அதிகரிக்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

நடைமுறைக்கு வந்துள்ள 18 வீத வற் வரியானது, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் வெளியிடப்படும் பொருட்களுக்கு மாத்திரமே பொருந்தும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் 2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் சந்தையில் வெளியிடப்பட்ட பொருட்களுக்கு இந்த அதிகரித்த வற் வரி அடிப்படையில் பொருந்தாது என அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

எனவே, சந்தையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், தன்னிச்சையாக விலைகளை அதிகரிக்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# திடீரென உயர்வடைந்த இலங்கை ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி திடீரென உயர்வடைந்துள்ளது. இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 326.85 ரூபாவாகவும் கொள்வனவு விலை 316.92 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் கனேடிய டொலரின் விற்பனை விலை 248.19 ரூபாவாகவும் கொள்வனவு விலை 237.77 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 361.90 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 346.92 ரூபாவாகவும் ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 417.09 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 401.67 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5-6)

# இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும்

## இந்திய அரசை வலியுறுத்திய அண்ணாமலை



(சென்னை)

இந்தியாவில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை இந்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கையில் குடியேறி இரு நூற்றாண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூறும் வகையில் புதுடில்லியில் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இதற்குரிய பிரத்யேக அஞ்சல் தலையை பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ஜே.பி.நட்டா வெளியிட, இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநரான செந்தில் தொண்டமான் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்ததாவது.

"இலங்கையிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்திற்கு வருகை தந்த ஐந்து முதல் ஆறு லட்சம் வரையிலான தமிழர்களுக்கு முறையான தங்குமிடம் உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பது உள்ளிட்ட நிறைய வாக்குறுதிகள் தரப்பட்டன. அவை உடனடியாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றப்பட வேணடும்.

வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் சூழலில், இந்திய வம்சாவளி தமிழர்கள் பலர் இந்தியாவிற்கு வருகை தந்தனர். அவர்களில் பலரும் இங்கு குடியுரிமை இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழக முகாம்களில் பிறந்தவர்களுக்கும் தீவிர குற்ற பின்னணி இல்லாதவர்களுக்கும் இந்திய குடியுரிமை வழங்குவது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு கோரிக்கை வைத்திருக்கிறோம். இதற்கு விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# 50,000 மெட்ரிக் தொன் கீரிச்சம்பா இறக்குமதி

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் 50,000 மெட்ரிக் டொன் கீரி சம்பா அரிசி தொகையை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த காலத்தில் இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதியை மேற்கொள்வது மிகவும் சிரமமானது என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கீரிச் சம்பா அரிசியை குறிப்பிட்ட அளவு இறக்குமதி செய்ய முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 50,000 கிலோகிராம் கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை தற்போது அனுமதி வழங்கியுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# டெஸ்டில் ஆடுவது எப்படி

## கில்லுக்கு கவாஸ்கர் அறிவுரை



எதிர்பார்க்கப்பட்ட தென் ஆபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் சுப்மன் கில் சோபிக்கவில்லை என இந்திய கிரிக்கெட்




அணியின் முன்னாள் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

இந்த நிலையில் கில் டெஸ்டில் எப்படி ஆட வேண்டும் என்பது குறித்து கவாஸ்கர் சில அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

இது குறித்து கவாஸ்கர் கூறுகையில், ஒரு நாள் மற்றும் 20 ஓவர் கிரிக்கெட்டில் ஆடுவதை காட்டிலும், டெஸ்ட் கிரிக்கெட்டில் விளை யாடுவதற்கு சிறிது வித்தியாசம் உள்ளது. ஆனால் அவர் ஒரு நாள் மற்றும் 20 ஓவர் போட்டி போன்றே டெஸ்டிலும் அதிரடியாக ஆட நினைக்கிறார்.

குறுகிய வடிவிலான போட்டிக்கு பயன்படுத்தப்படும் வெள்ளை நிற பந்தை விட டெஸ்ட் கிரிக்கெட்டுக்குரிய சிவப்பு நிற பந்து காற்றிலும், ஆடுகளத்திலும் வேகமாக நகரும். மேலும் சிவப்பு பந்து அதிகமாக பவுன்சும் ஆகும். அதை மனதில் வைத்து அவர் டெஸ்டில் விளையாட வேண்டும் மீண்டும் அவர் பார்முக்கு திரும்புவார் என்று நம்புகின் றேன் எனக்கூறினார். (நி-5-6)

# சாதனை படைத்த சமரி அத்தபத்து



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவர் சமரி அத்தபத்து 2023 ஆம் ஆண் டுக்கான கிரிக்இன்போ இணையத்தள மகளிர் ஒருநாள் மற்றும் இருபது-20 அணிகளின் பட்டியலில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை இந்த ஆண்டு பிக் பாஷ் லீக் மகளிர் கிரிக்கெட் போட்டியில் சிறந்த வீராங் கனையாகவும் சமரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் சமரி அத்தபத்து இந்த வருட இந்திய மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் ஏலத்தில் எந்த அணியாலும் வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தககது (நி-5-6)

# நியூகேஸ்லே அணியை பந்தாடியது லிவர்பூல்



பிரீமியர் லீக் தொடரில் லிவர்பூல் அணி 4-2 என்ற கோல் கணக்கில் நியூகேஸ்லே அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்தின் அன்பீல்ட் மைதானத்தில் லிவர்பூல் மற்றும் நியூகேஸ்லே அணிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி நடந்தது.

பரபரப்பாக தொடங்கிய இப்போட்டியில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால் முதல் பாதியில் கோல் ஏதும் விழவில்லை.

ஆனால் இரண்டாம் பாதியில் இருதரப்பில் இருந்தும் அடுத்தடுத்து கோல்கள் அடிக்கப்பட்டன. ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணி யின் நட்சத்திரம் முகமது சாலா கோல் அடித்தார்.

அதற்கு பதிலடியாக நியூகேஸ்லே வீரர் அலெக்ஸாண்டர் ஐசக் 54ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். அதனைத் தொடர்ந்து லிவர்பூல் வீரர்கள் கர்டிஸ் ஜோன்ஸ் (74), கோடி காக்போ (78) கோல் அடித்ததால் போட்டி சூடு பிடித்தது.

ஆட்டத்தின் 81ஆவது நிமிடத்தில் நியூகேஸ் லேலின் ஸ்வென் போட்மான் அபாரமாக கோல் அடித்தார். 86ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் முகமது சாலா கோல் அடிக்க, இறுதியில் லிவர்பூல் அணி 4 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தை நியூசிலாந்தில் நிறுவ அனுமதி

(வெலிங்டன்)

நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை மேலும் விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தை நிறுவுவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5-6)

# பொதுக் கழிப்பறைக்கான கட்டணமும் அதிகரிப்பு

(கொழும்பு)

வற் வரி 18 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பொதுக் கழிப்பறைகளுக்கான கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுக் கழிப்பறைகளுக்கான 10.00 ரூபா கட்டணம் 20.00 ரூபாவாகவும் 20.00 ரூபாவாக இருந்த கட்டணம் 30.00 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற் வரியுடன் சேர்த்து குடிநீர் கட்டணமும் அதிகரித்துள்ள நிலையில், பொதுக் கழிப்பறைகளுக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி-5-6)

# அரசாங்கம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

## விவசாய தேசிய சம்மேளனம்

(கொழும்பு)

வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மஹியங்கனை பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்துக் கருத்துரைத்த விவசாய தேசிய சம்மேளனத்தின் இணைப்பாளர் ஜயந்த ரந்தெனிய இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு இடம்பெறவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# அதிகரித்துள்ள ஐஸ்கட்டியின் விலை

(கொழும்பு)

மீன்களைப் பாதுகாக்க பயன்படுத்தும் ஐஸ் கட்டியின் விலை அதிகரிக்கப்படும் என உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய ஐஸ்கட்டியின் விலையை 100 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஐஸ்கட்டியை வற் வரி அதிகரிப்பால் 700 ரூபாய்க்கு விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் தீர்மானித்துள்ளனர். (நி-5-6)

# அதிக வருமானத்தை ஈட்டிய சுங்கத்துறை

(கொழும்பு)

இலங்கை சுங்கத்துறை வரலாற்றில் அதிக வருவாயை கடந்த ஆண்டு ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு 970 பில்லியன் ரூபாயை வருமானமாக ஈட்டியுள்ளதாக இலங்கை சுங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக 2018 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட 923 பில்லியன் ரூபாய் வருமானமே இதுவரையில் இலங்கை சுங்கத்தின் வரலாற்றில் ஈட்டப்பட்ட அதிக வருமானமாக பதிவாகியிருந்தது.

நிதியமைச்சு கடந்த வருடத்துக்கான வருமான இலக்காக ஆயிரத்து 217 பில்லியன் ரூபாவை இலங்கை சுங்கத்துக்கு நிர்ணயித்திருந்தது.

எவ்வாறாயினும் இறக்குமதி கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, அந்த இலக்கை 893 பில்லியன் ரூபாவாக திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# தடுப்பணை அமைத்து தருமாறு ஆனைவிழுந்தான் மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளம் கிராமத்திற்குள் மழை வெள்ளம் வராமல் தடுப்பணை அமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான்குளம் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

ஆண்டு தோறும் பெரும் மழை காலத்தில் வன்னேரிக்குளம் அக்கராயன் வீதியினை குறுக்கறுத்து பாய்கின்ற காட்டு வெள்ளம் இக்கிராமத்தின் நடுப் பகுதி ஊடாக பெருமளவில் பாய்வதன் காரணமாக வெள்ள இடர் மிகுந்த பகுதியாக பெருமளவு குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில் காட்டு வெள்ளம் கிராமத்திற்குள் பரவாமல் வன்னேரிக்குளம் அக்கராயன் வீதியில் இருந்து ஆனைவிழுந்தான்குளம் வரை ஒரு சிறிய அணையை அமைப்பதன் மூலம் காட்டு வெள்ளம் குளத்தினை நேரடியாக சென்றடைவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கிராம மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-350)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
முன்னாள் உப அதிபர்

திருமதி.
அன்னம்மா பவளமணி
ஜெயக்குமார்



அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(18476)

பிரிவால் துயருறும்: சிவபூமி குடும்பம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.


# இராசிபலன்

03.01.2024
மார்கழி 18, புதன்கிழமை-
சப்தமி பிற்பகல் 5.58 மணிவரை
உத்தரம் பிற்பகல் 1.30 மணிவரை

சுபநேரம் -5.00-6.30 மணிவரை
இராகுகாலம்-12.30-2.00 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்.

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.




பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைப்பீர்கள்.




உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்.




பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் கூடும், வருமானம் திருப்தி தரும், புகழ் பெற்றவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




புதிய முயற்சிகள் கைகூடும், மனம் குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர்.




உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்களின் பாதிப்புகள் குறித்து அறிக்கையிடல் வேண்டும்

## ஆளுநர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தங்களினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இயற்கை அனர்த்தங்களின் போது சொத்துக்கள், உயிர் சேதங்கள் தொடர்பில் மாத்திரம் அறிக்கையிடப்படுகின்ற போதிலும் பயிர்ச்செய்கைகளுக்கான சேத விபரங்கள் பட்டியலிடப்படாமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.


அனர்த்தங்களின் போது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நட்டஈடு கிடைப்பதில்லை எனவும் காப்புறுதிகள் கிடைப்பதில்லை எனவும் விவசாயிகள் கூறியுள்ளனர்.

சேத விபரங்கள் தொடர்பில் பட்டியலிடாமையே இதற்கு காரணம் எனவும் விவசாயிகள்



தெரிவித்துள்ளனர்.

விடயங்களை ஆராய்ந்த ஆளுநர், இந்த விடயங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும்என தெரிவித்தார். (நி-5-6-33)



யாழ்/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை மாணவர்களுக்கு சாரணியர் இயக்கம் ஆரம்பிப்பதற்கு பூமணி அம்மா அறக்கட்டளையின் ஊடாக நேற்று முன்தினம் சீருடை வழங்கி வைக்கப்பட்டது.

## சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபபூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 700 | 650 | 800 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1200 | 1000 |
| தக்காளி | 800 | 700 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 120 | 150 |
| கோவா | 450 | 600 | 500 | 600 |
| கரட் | 800 | 500 | 900 | 1000 |
| பூசணி | 160 | 160 | 150 | 250 |
| புடோல் | 320 | 350 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 450 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 480 | 400 | 500 |
| பாகற்காய் | 800 | 1000 | 600 | 1200 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 500 | 300 | 500 |
| லீக்ஸ் | 450 | 500 | 550 | 600 |
| பீற்றூட் | — | 700 | 600 | 800 |
| கறிமிளகாய் | 800 | 650 | 600 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 600 | 500 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 450 | 750 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 250 |
| தேசிக்காய் | 600 | 500 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 800 | 700 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 900 | 1200 | 600 | — |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 120 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3008

தருண்




லாத்து




பிரணவன்




கிருசா




மீரா




பவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் FACEBOOK பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குற்றசெயல் தொடர்பில் தகவலளிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

விசேட சுற்றிவளைப்பு வேலைத் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்தும் வேலைத்திட்டம் நேற்று கொழும்பில் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது குற்றச் செயல்களில் ஈடுபடும் தரப்பினர் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்கு 071 8598 800 எனும் புதிய தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது. (நி-5-6)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய் படவரைஞர்களைப் பதிவு செய்தல்/புதுப்பித்தல்-2024

2023.12.12 ஆம் திகதிய வலம்பரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக 2024 ஆம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு/ புதுப்பிப்பதற்கு கோரப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக **NVQ Level 4 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபு- Drafting Technology (Building) கற்கைநெறிக்கான சான்றிதழுடன் NVQ Level 5 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபிற்கான கற்கைநெறியினை தற்போது பயின்று கொண்டிருப்பவர்களும்** விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.மேலும் விண்ணப்பத் திகதி 2024.01.16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(சி-8069)

**சீ.சபேசன்,**
**செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

**2024.01.03**

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. கா. துரைச்சாமிக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

## சேதமடைந்த பாலத்தை புனரமைத்த சிராட்டிக்குள மக்கள்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவானது வெள்ள நீரினால் சூழப்பட்டிருந்த நிலையில் வெளித் தொடர்புகள் எதுவுமின்றி தடைப்பட்டிருந்தது.

இந் நிலையில் அந்தப் பகுதியில் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியில் பாலம் ஒன்று முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பாலத்தினை கிராம சேவகர் ஊடாக நேற்று முன்தினம் கிராம மக்கள் ஒன்றிணைந்து புனரமைப்பு செய்யும் வேலையில் ஈடுபட்டனர்.(நி-5-6-299)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உபஅலுவலகம்- தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் குமாரலிங்கம் ஜனகன் பெண் இந்துஜா**
**முகவரி இளவாலை வடக்கு, இளவாலை.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை. தெல்லிப்பளை உபஅலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் - 02 ஆனைவிழுந்தான் கடவயல் வீதி (மெய்கண்டான் வீதியில்) அமைந்துள்ள ஆதனம் உரிமை கோருபவர் குமாரலிங்கம் ஜனகன் என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் தி.கஜப்பிரியா முகதாவில் 387ஆம் இலக்கத்தில் 21.06.2021 ஆம் திகதியில் முடிந்த அறுதி உறுதிப்படி தம்பு கனகரட்ணம் மகள் மகேஸ்வரி ஆகியோர் குமாரலிங்கம் ஜனகன் பெண் இந்துஜா என்பவர்களுக்கு அறுதியளித்துள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை வடமேற்கு இறையுமான "இப்பன்றிக்கலட்டி" நிலப்பரப்பு 24 பரப்பு குளி 7.50 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்கள் வரைந்த 4982/ 2021.01.23 ஆம் இலக்க வரை படத்தின்படி துண்டு- 01ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு:- வைரமுத்து சிவகுமாருக்குரிய ஆதனமும், தம்பிப்பிள்ளை குகநாதனுக்குரிய ஆதனமும்.இராஜேஸ்வரி வேலும் மயிலுக்குரிய ஆதனமும்.

வடக்கு- சங்கரப்பிள்ளை ஆனந்தத்துரையின் உரிமைக்காரருக்குரிய ஆதனம்.

மேற்கு- சங்கரப்பிள்ளை ஆனந்தத்துரையின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும், எலியாஸ் துரைரத்தினத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும் பீற்றர் செல்லத்துரையின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும்.

தெற்கு -பீற்றர் செல்லத்துரையின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும் கிராமசபை ஒழுங்கையும்.

இவ்வெல்லைப்படி இதனடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

மேற் குறித்த ஆதனத்தை குமாரலிங்கம் ஜனகன் பெண் இந்துஜா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

## பள்ளிக்குடா இறங்குதுறையை புனரமைப்பு செய்யுங்கள்

### கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிர தேசத்தில் அதிகளவான கடற் தொழிலாளர்களைக் கொண்ட பள்ளிக்குடா பகுதியில் உரிய இறங்குதுறை வசதிகளின்மையால் சுமார் 460 இற்கும் மேற்பட்ட கடற் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர்.

குறித்த கடற் தொழி லாளர்கள் 300 இற்கும் மேற்பட்ட படகுகளை பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் உரிய இறங்கு துறை வசதிகள் இன்மையால் கடற் தொழிலாளர்கள் தமது படகுகள் மற்றும் இயந்திரங்களை தொழில்களுக்கு கொண்டு செல்வதிலும் தொழிலுக்கு சென்று திரும்புவதிலும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்தனர்.

எனவே தமக்கான இறங்கு துறைகளை உரியவாறு ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறும் தமது கடற்கரையோரப் பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஏற்ற வகையில் தடுப்புச் சுவர்களை அமைத்துத் தருமாறும் குறித்த பகுதி கடற் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6)


## மணிவிழா வாழ்த்து

திருமதி. செல்வகுமாரி சந்திரகுமார்





யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 20 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.செல்வகுமாரி சந்திரகுமார் அவர்களின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துவதோடு அவர் தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(18441)

**வாழ்த்துவோர்– ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கின்னஸ் சாதனை படைத்த சூரிய நமஸ்காரம்



(டில்லி)

புத்தாண்டையொட்டி சூரிய நமஸ்காரம் செய்தமைகின்னஸ் சாதனையாக பதிவாகியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் உள்ள மோதரா சூரியக் கோவிலில் வழிபாடு இடம் பெற்றது.

இங்குள்ள மோதரா சூரியக் கோவிலில் புத்தாண்டையொட்டி காலையில் 4 ஆயிரம் பேர் சேர்ந்து ஒரே நேரத்தில் சூரிய நம ஸ்காரம் செய்தனர். இது கின்னஸ் சாதனையாகப் பதிவாகியுள்ளது.

இந்தச் சாதனை நிகழ்ச்சி பற்றி பிரதமர் மோடி, குஜ ராத் 2024 ஆம் ஆண்டை ஒரு குறிப்பிட்ட சாதனையுடன் வரவேற்றுள்ளது. 108 இடங்களில் ஒரே நேரத்தில் அதிக மக்கள் சூரிய நமஸ்காரத்தில் பங்கேற்று உலக சாதனை படைத்துள்ளனர். நமக்கு தெரிந்தபடி, 108 என்ற எண் நமது கலாச்சாரத்தில் ஒரு முக்கியமானது. அதில், மோதரா சூரியக் கோயிலும் அடங்கும்.

இங்கு அனைத்து மக்களும் ஒன்றுகூடி உலக சாதனை படைத்துள்ளனர். இது நமது நாட்டின் கலாச் சாரம் மற்றும் பாரம்பரி யத்தின் மீதான அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்று. இந்த சூரிய நமஸ்காரத்தை உங்கள் அன்றாட வாழ் க்கையின் ஒரு அங்கமாக ஆக்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5-6)

# ஜப்பானில் ஏற்பட்ட

# 30 பேர் பரிதாப

## அதனை தொடர்ந்து தென்



**(டோக்கியோ)—**

**ஜப்பானில் ஏற்ப**

**உயிரிழந்ததுடன் ப**

ஜப்பானின் வடகிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் எற்பட்டதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மொத்தமாக 155 முறை நில அதிர்வு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்ததுடன் வீதிகள் பிளந்து கடுமையாக சேதம் அடைந்தன.

இதேவேளை மொத்தமாக 155 முறை நில அதிர்வு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.

இன்னும் ஓரிரு நாட்களில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கடற்கரையோர பகுதிகளில் கவனமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 52 ஆண்டு கால ஆட்சிக்குப்பின் பதவி துறக்கும் டென்மார்க் ராணி

(கோபன்கேகன்)

டென்மார்க் ராணி இரண்டாம் மார்கிரேட் அரியணையை துறப்பதாக அறிவித்துள்ளார். 1972 ஆம் ஆண்டு அரியணை ஏறிய 83 வயதான ராணி 52 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

இதன்மூலம் ராணி ஐரோப்பாவில் நீண்ட காலம் பதவி வகித்தவர் என்ற அந்தஸ்த்தை பெற்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை தொலைக் காட்சியில் ராணி ஆற்றிய புத்



தாண்டு உரையில்,

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வெற்றிகரமாக முதுகில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் "அறுவை சிகிச்சை இயல்பாகவே எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கத் தூண்டியது எனவும், அடுத்த தலைமுறைக்கு பொறுப்பை விட்டுச்செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது எனவும் தெரிவித் தார்.

ஜனவரி 14 ஆம் திகதி டென்மார்க் ராணி பதவியில் இருந்து விலகுவதாகவும் தனது அரியணையை என் மகன் பட்டத்து இளவரசர் பிரடெரிக்கிடம் விட்டுச் செல்கின்றேன் என்றும் ராணி இரண்டாம் மார் கிரேத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சிவப்பு நிறமாக மாறிய ‘இஸ்கிதிம்கா’ நதி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் உள்ள இஸ்கிதிம்கா என்ற நதியில் தண்ணீரின் நிறம் சிவப்பு நிறத்தில் மாறியுள்ளது.

இந்த நதி அந்நாட்டின் கெமரோவோ தொழில் நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

இதனால் மிகுந்த கவலை அடைந்துள்ள உள்ளூர் மக்கள் ஆற்றில் கால் வைக்கவே அச்சம் கொண்டுள்ளனர்.

காரணத்திற்கான கணிப்புகளும் விசாரணைகளும் ரஷ்ய சுற்றுச்சூழல் அதிகாரிகள், இஸ்கிதிம்கா நதியின் மாசுபாடு குறித்து நடத்திய முதற்கட்ட விசாரணையில், நதியில் அடைபட்டுள்ள கழிவு பொருள் காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, கடந்த 2020 ஆம் ஆண்டிலும் இதே ரஷ்ய நாட்டில் டீசல் சேமிப்புக் கிடங்குகளில் இருந்து வெளியான டீசலால் சைபீரியன் நகரத்திற்கு அருகாமையில் உள்ள ஆர்டிக் நதிகளிலும் இதுபோலவே ரத்தச் சிவப்பு நிறத்திற்கு தண்ணீர் மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சிரியா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

### 8 பேர் உயிரிழப்பு



(தமஸ்கஸ்)

சிரியாவின் அலிப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் பஷிர் அல் அசாத் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் அவரது ஆட்சிக்கு ஈரான் அரசு ஆதரவு அளித்து வருகின்றது.

அதேவேளை, ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள், ஆயுதக்குழுக்கள் சிரியா, ஏமன், லெபனான் போன்ற நாடுகளில் இருந்தவாறு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்கும் வகையிலேயே குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## புத்
## 156



(காசா)

புத்தாண்
நேற்று முன்
தாக்குதலில்
கொல்லப்ப
சுகாதாரத்து
இஸ்ரேல்
ஒக்டோபர் ம
னது இதுவ
வருகிறது.
இஸ்ரேல்
தாக்குதல்க
கும் அதிக
ழந்துள்ளன
அதற்கு ப
மருந்து வ
நடவடிக்கை
வருவதாக கூ
ஆங்கில
முன்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ட நிலநடுக்கத்தால்
# பமாக உயிரிழப்பு

## தென்கொரியாவில் சுனாமி

யோா)

**ல் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் 30 பேர் துடன் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.**

கம் கார
உயிரிழ
இடிபாடு
க்கியுள்ள


நாட்களில்
ம் ஏற்பட
கடற்கரை
வனமாக
சரிக்கை

அதேவேளை ஜப்பானில் பதிவான நிலநடுக்கத்தை தொடர்ந்து தென் கொரியாவின் கிழக்கு கடற்கரையை ஒரு மீற்றருக்கும் குறைவான சுனாமி ஆழிப்பேரலை தாக்கியுள்ளது.

இதன்படி, 1.5 அடி உயரத்தில் குறித்த சுனாமி ஏற்பட்டதாக தென்கொரியாவின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி-5-6)



## சூரியனை தொட்டு ஆராய திட்டமிடும் நாசா



(வோஷிங்டன்)

சூரியனை தொட்டு ஆராய்ச்சி செய்யும் திட்டத்தை 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் செயற்படுத்த இருப்பதாக நாசா தெரிவித் துள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா சூரியனை ஆராய்ச்சி செய்ய பல்வேறு திட்டங்களை தொடர்ச்சியாக நிறைவேற்றி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் பார்க்கர் சோலார் ப்ரோப்.

இத்திட்டம் சூரியனின் கரோனாவில் அதிக நேரம் விண்கலத்தை இருக்கச் செய்வது.

இதன் மூலம் சூரியனுடைய நிலையை ஆராய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு சூரியனுக்கு மிக அருகில் செல்லும் செயற்றிட்டமும் இது தான்.

இந்த மிக முக்கியமான பார்க்கர் சோலார் ப்ரோப் திட்டம் வரும் டிசெம்பர் மாதம் செயற்படுத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக பார்க்கர் சோலார் ப்ரோப் 7 லட்சம் கிலோமீற்றர் வேகத்தில் சூரியனை கடந்து செல்லும், இவ்வாறு 3.8 மில்லியன் மைல்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நியூயோர்க்கில் இருந்து லண்டனை 30 வினாடிகளில் சென்றடைவதற்கு சமம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## புத்தாண்டு தினத்தன்று 156 பாலஸ்தீனியர்கள் பலி





(காசா)

புத்தாண்டின் முதல் நாளான நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 156 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் -காசா இடையே கடந்த ஒக்டோபர் மாதம் தொடங்கிய போரானது இதுவரையிலும் தொடர்ந்து வருகிறது.

இஸ்ரேல், காஸா மீது தொடர் தாக்குதல்களை நடத்தி 21,000 இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

அதற்கு பதிலளித்த இஸ்ரேல், காசா மருத்து வனைகளை பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி வருவதாக கூறியது.

ஆங்கில புத்தாண்டான நேற்று முன்தினம் உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்ட நிலையில், இஸ்ரேல் இராணுவம் காஸா எல்லையில் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து, மத்திய காஸாவிலுள்ள மகாஸி முகாம் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் இராணுவம் நடத்திய இந்த தாக்குதலில் 24 மணிநேரத்தில் 156 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 246 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 21,978 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 56,697 பேர் படுகாயமடைந்துள்ளதாக காஸா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் பாலஸ்தீனியர்கள் போராட்டம்




(வோஷிங்டன்)

நியூயோர்க் நகரில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது பாலஸ்தீன ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

நியூயோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில் நடைபெறும் புத்தாண்டு கொண்டாட்டம் உலகப்புகழ் பெற்றது.

பால் டிராப் எனப்படும் கிறிஸ்டல் கற்களால் ஆன பந்து டைம்ஸ் சதுக்கத்தின் உச்சியில் இருந்து விடப்படும்.

அந்த நிகழ்வைக் காண லட்சக்கணக்கானோர் திரள்வார்கள். ஏற்கனவே அமெரிக்காவில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபடுவதால் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கு அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தது போல், நியூயோர்க் நகரில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது திரளான பாலஸ்தீன ஆதரவாளர்கள் பதாகைகளை உயர்த்திக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கண்காணிக்க அந்நாட்டு பொலிஸார் ட்ரோன் கேமராக்களை பயன்படுத்தினர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### பூரட்டாதி 4 ஆம் பாதம் செலவு அதிகரிக்கும்

தனக்காரகன், புத்திரக்காரகன் எனப்படும் குருபகவான் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஆயுள், கர்மகாரகனான சனிபகவான் ராசிநாதனாகவும் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு உங்கள் நட்சத்திர நாதனே ராசிநாதனாகவும் உள்ளனர்.

கோச்சார ரீதியாக சனி பகவான் சஞ்சரிக்கும் காலங்களில் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை அவரவரின் கர்ம வினைகளுக்கேற்ப வழுங்கக் கூடியவராகிறார்.

பூரட்டாதி முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம சனியாகவும் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு விரயச் சனியாகவும் சஞ்சரிக்கிறார். இதனால் முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத நெருக்கடிகள், தொழில், பணிகளில் பிரச்சினைகளும் மனதில் குழப்பம், வாழ்க்கைத்துணையுடன் சங்கடமும் ஏற்படும். 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு வருமானத்தில் தடை, வீண் அலைச்சல், மன உளைச்சல், குடும்பத்தில் சண்டை சச்சரவுகளும் எதிரிகளால் இடையூறு, பொருளாதார நெருக்கடி, தவறான வழியில் செல்லும் சூழ்நிலைகள் ஏற்படும்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிச 20.2023 - பெப் 15.2024 வரையிலும் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ. 4.2024 - பெப் 27..2025 வரையிலும் அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் சங்கடங்களில் இருந்து உங்களை விடுவிப்பார். எதிர்பார்த்த நன்மைகளை உங்களால் அடைய முடியும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். வருமானத்தில் இருந்த தடைகள் விலகும். குடும்பத்தில் அமைதியான நிலை ஏற்படும். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உண்டாகும்.

**ராகு - கேது பெயர்ச்சி**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 4 ஆம் பாதத்தினருக்கு தொழிலில் தடுமாற்றம், பணியில் பிரச்சினை, வீண் அலைச்சல், செயல்களில் நெருக்கடி, வீண்பழி, செய்யாத குற்றத்திற்கு அபராதம், பொருள் இழப்பு, குடும்பத்தில் பிரச்சினை, நோய்த்தொல்லை அதிகரிக்கும். ஏப்.26. 2025 இற்கு பிறகு 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 12இல் ராகுவும் 6இல் கேதுவும் சஞ்சரிப்பதால் செலவு அதிகரிக்கும். அதே சமயத்தில் உங்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். உடலில் இருந்த சங்கடம் விலகும். எதிரிகள் விலகிச் செல்வர். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். சமூகத்தில் செல்வாக்கு உயரும்.

**குரு சஞ்சாரம்**

பூரட்டாதி 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 2 ஆம் இட குருவால் ஏப்.30.2024 வரை நன்மைகள் அதிகரிக்கும். வருமானம் உயரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். அதன்பின் 3, 4 ஆம் இடங்களில் சஞ்சரிக்கும் குருவால் உங்களுக்கு நன்மைகளை வழங்க முடியாமல் போகும். நெருக்கடியான நிலை உண்டாகும்.

**பொதுப்பலன்**

இக்காலத்தில் செயல்களில் நிதானம் அவசியம். முயற்சி இழுபறியாகும். உடல் நலனில் பின்னடைவு உண்டாகும். செலவு அதிகரிக்கும். குடும்பத்திலும் சின்னச் சின்ன பிரச்சினைகள் ஏற்படும். வரவேண்டிய பணம் வருவதற்கு தாமதமாகும். தொழில், வியாபாரம் போன்றவற்றில் எதிர்பார்த்த வருமானம் இல்லாமல் மனம் குழப்பமடையும். வீண் செலவு அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் ஏற்பட்டு உங்களை சங்கடப்படுத்தும்.

**தொழில்**

தொழிலில் உழைப்பு அதிகரிக்கும். திட்டமிட்ட முயற்சிகள் லாபமாகும். விற்பனையில் கூடுதல் கவனம் தேவைப்படும். ஊழியர்களை நம்பி எந்தவொரு பொறுப்பையும் இக்காலத்தில் ஒப்படைக்க வேண்டாம். அதனால் எதிர்மறையான பலன்களே உண்டாகும். எல்லாவற்றிலும் உங்கள் நேரடி கண்காணிப்பு இக்காலத்தில் அவசியம்.

**கல்வி**

படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். ஆசிரியர்கள் அறிவுரைகளை பின்பற்றுவது நன்மையளிக்கும். விடா முயற்சி மட்டுமே நீங்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களை பொதுத் தேர்வில் வழங்கும் என்பதால் மற்ற செயல்களில் கவனம் செலுத்தாமல் படிப்பது மிக அவசியம்.

பரிகாரம் பைரவர், வராகி வழிபாடு செய்வதுடன் உணவு, உடை தானம் செய்வதால் நன்மை அதிகரிக்கும்.

### உத்திரட்டாதி; வெளிநாடு செல்வீர்கள்

ஆயுள்காரகன், கர்மகாரகன் எனக் கூறப்படும் சனிபகவான். புத்திர காரகனான குருபகவான் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிச.20.2023 முதல் உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் விரய சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான். உங்கள் நட்சத்திர நாதனான சனி உங்கள் ராசிநாதனுக்கு நட்பானவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப வழுங்க வேண்டியவராகிறார்.

இதுவரை 11ஆம் இடத்தில் சஞ்சரித்து பல நன்மைகளையும் தொழிலில் சிறப்பான நிலையையும் வருமானத்தையும் வழங்கி வந்திருப்பார். வீட்டில் மகிழ்ச்சி, ஆனந்தத்தை ஏற்படுத்தி இருப்பார். பொன், பொருள் சேர்க்கையை உண்டாக்கி இருப்பார். இப்போது 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது முன்பு போல் அவரால் நன்மை வழுங்க முடியாது. அதற்கு காரணம் இக்காலம் உங்களுக்கு ஏழரை சனியின் தொடக்க காலம். அவருடைய பார்வைக்குள் இப்போது நீங்கள் வந்துள்ளீர்கள். இந்த நிலையில் 12ஆம் இடத்து சனியால் பொருளாதாரத்தில் பிரச்சினை. வீண் அலைச்சல், எதிரிகளால் இடையூறு, வீண் செலவு, உடல்நிலையில் சங்கடம், உறவுகளிடம் பகை என்ற நிலை ஏற்படலாம்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ. 4.2024 -பெப். 27. 2025 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29.2025 - ஜூலை 2.2025 வரையிலும் நவ.17. 2025 - மார்ச் 6.2026 வரையிலும் அஸ்தமனம் மற்றும் வக்கிர நிலைகளாலும் விரய சனியின் பாதிப்புகளில் இருந்து உங்களுக்கு விடுதலை உண்டாகும். வழக்கமான முயற்சிகள் எந்தவிதமான தடைகள் இல்லாமல் நிறைவேறும். திட்ட மிட்ட செயல்களில் லாபம் உண்டாகும். பிரச்சினைகள் வந்தாலும் அதை சமாளிக்கும் சக்தி ஏற்படும். பணியில் இருந்த நெருக்கடி தீரும். நீங்களே எதிர்பார்க்காத அதிர்ஷ்ட பலன்களால் உங்களுக்கு நன்மை உண்டாகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு உங்கள் ராசிக்குள்ளும் கேது 7ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் நிலையில்செயல்களில்தடுமாற்றம்உண்டாகும். வீண் அலைச்சல் அதிகரிக்கும். தொழில், உத்தியோகத்தில் நெருக்கடி தோன்றும். சிலருக்கு வீண் பழியும் செய்யாத குற்றங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையும் ஏற்படும். குடும்பத்தில் சங்கடம், பிரச்சினை, வாழ்க்கைத் துணையுடன் மனக்கசப்பு, உடல்நிலையில் பாதிப்பு என்று எதிர்மறையான பலன்களே உண்டாகும். ஏப்.26.2025 முதல் ராகு 12 ஆம் இடத்திலும் கேது 6 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் உடலில் இருந்த சங்கடங்கள் விலகும். ஆரோக்கியமாக செயற்படுவீர்கள். முயற்சிகளில் லாபம் உண்டாகும். தொழில், பணியில் இருந்த பிரச்சினைகள் விலகும். எதிரிகள் உங்களை விட்டு விலகிச் செல்வர். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி உண்டாகும். புதிய பதவி, பொறுப்புகள் வந்து சேரும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் முன்னேற்றத்தை உண்டாக்குவார். எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார். பணவரவை அதிகரிப்பார். குடும்பத்தில் இருந்த சங்கடங்களை விலக்கி வைப்பார். [illegible] பாற்றும் நிலையை உண்டாக்குவார். பொன், பொருள் சேர்க்கை அமையும். பணியில் உங்கள் நிலையை உயர்த்துவார். தொழிலில் இருந்த பிரச்சினைகளை முடிவிற்கு கொண்டு வருவார். வியாபாரத்தில் லாபத்தை அதிகரிப்பார். மே 1.2024 இற்கு பிறகு, 3ஆம் இடத்திலும் 4ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் குருபகவான், எதிர்பாராத நெருக்கடிகளை ஏற்படுத்து வார். ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்படும். உங்களைச் சுற்றி இருந்தவர்கள் எதிராக செயற்படுவர்.

**பொதுப்பலன்**

குடும்பத்தில் எதிர்பாராத செலவு தோன்றும். அலைச்சல் அதிகரிக்கும். வேலைகளில் டென்ஷன் உண்டாகும். சிலருக்கு மேற்படிப்பிற்காகவும் வேலைக்காகவும் வெளிநாட்டிற்கு செல்லும் சூழ்நிலை உண்டாகும். புதிய நட்புகளால் தேவையற்ற பிரச்சினைக்ள் தோன்றும். வீண் பழிகளும் குடும்பத்தில் குழப்பமும் தோன்றும். வியாபாரம், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் முன் ஒருமுறை யோசிப்பது நல்லது. புதியவர்களை நம்பி எந்தவித முயற்சியிலும் ஈடுபடக்கூடாது. சரி என்று உங்களுக்கு தோன்றுகின்ற விடயத்தில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.




**20.12.2023-06.03.2026**

**தொழில்**

இக்காலத்தில் செய்து வரும் தொழிலில் கூடுதல் தவனம் செலுத்துவது நன்மையாக இருக்கும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதற்கு முன்பாக மார்க்கெட் நிலவரத்தை புரிந்து கொண்டு செயல்படுவதால் சங்கடங்கள் உங்களை நெருங்காமல் போகும். உங்கள் அறிவாற்றல் இக்காலத்தில் லாபத்தை ஏற்படுத்தும். பங்கு வர்த்தகம், பைனான்ஸ், ஹார்டுவேர்ஸ், நகை வியாபாரம், ரியல் எஸ்டேட், பதிப்பகம், கல்விக் கூடங்கள் உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். லாபத்தை உண்டாக்கும்

**கல்வி**

இக்காலத்தில் படிப்பில் முழுமையான கவனம் செலுத்துவது அவசியம். ஆசிரியர்களின் ஆலோசனை உங்களுக்கு நன்மையை உண்டாக்கும். எதிர்கால நலனை மனதில் நினைத்து பொதுத்தேர்வை விழிப்புணர்வுடன் எதிர் கொள்வது வாழ்க்கையை மேம்படுத்தும்.

பரிகாரம்; சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தானம் செய்வதும் சூரியனை வழிபடுவதும் நன்மையளிக்கும்.

### ரேவதி வீண்செலவு அதிகரிக்கும்

கல்விக்காரகன் எனப்படும் புதபக வான். புத்திர காரகனான குருபகவான் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு, டிச.20. 2023 முதல் உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான்.

அவரவரின் கர்ம வினைக்கேற்ப பலன்களை வழுங்கக் கூடியவர் சனிபகவான். நட்பாக இருந்தாலும்பகையாக இருந்தாலும்அவர் சஞ்சரிக்கும் இடத்திற் கேற்ப பலன்களை வழங்கக் கூடிய நியாயம் தவறாத நீதிபதி ஆவார்.

விரய ஸ்தானம் என்னும் 12ஆம் இடத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் போது ஏழரை சனியின் தொடக்கம் ஆரம்பமாகிறது என்பதால் இக்காலத்தில் பணியில் தேக்கமும் வருமானத்தில் குறைபாடும் உண்டாகும். பொருள் விரயமாகும். வீண் அலைச்சல், மன உளைச்சல் ஏற்படும். மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் பங்கம் உண்டாகும். எதிரிகளால் சங்கடம், தீய வழியில் செல்லக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகும்.

வீண்செலவு அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும் என்பது பொதுவிதி என்றாலும் மற்ற கிரகங்களின் சஞ்சாரங்களும் சுய ஜாதகத்தில் கிரகங்கள் அமர்ந்த நிலை, நடைபெறும் திசா புத்திக்கேற்ப பலன் அமையும்.

**20.12.2023 - 6.3.2026 சனி சஞ்சாரத்தில் அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிச.20.2023 - பெப். 15.2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2.2025. மற்றும் நவ.17. 2025 - மார்ச் 6.2026 வரையிலும் சனி அஸ்தமனம் வக்கிர காலங்களிலும் விரய சனியின் பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். முயற்சிகள் யாவும் லாபமாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். இதற்கு முன்பிருந்த சங்கடங்கள் முடிவிற்கு வரும். தடைப்பட்ட முயற்சிகள் முடிவிற்கு வரும். பணவரவு அதிகரிக் கும். சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பணியின் காரணமாக வெளியூ ரில் வாழும் நிலை ஏற்படும். புதிய பொறுப்பு, பதவிகள் வந்து சேரும். குடும்பத் தில் சுபநிகழ்ச்சி நடந்தேறும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப்.26.2025 வரை உங்கள் ராசிக்குள் ராகுவும் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் அலைச்சலை அதிகரிப்பார்கள். பிரச்சினைகளில் சிக்க வைப்பர். அதே நேரத்தில் யோகப் பலன்களை வழங்குவர். சட்டரீதியான பிரச்சினைகளையும் ஏற்படுத்துவர். தீயவரோடு சேர வைப்பர். வாழ்க்கைத் துணையோடு பிரச்சினைகளையும் நண்பர்களுக்குள் கருத்து வேறுபாட்டையும் கூட்டுத்தொழிலில் சங்கடத்தையும் மனதில் பயத்தையும் உண்டாக்குவர். ஏப்.26.2025 முதல் விரய ஸ்தானத்தில் சனி பகவானுடன் ராகு சஞ்சரித்தாலும் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் கேது முன்னேற்றம் தருவார். உடலில் இருந்த சங்கடம், மனதில் இருந்த பயத்தை அகற்றுவார். ஆரோக்கியம் சீராகும். தொழில், வியாபாரத்தில் இருந்த தடை விலகும். போட்டியாளர்கள் உங்களை விட்டு விலகிச் செல்வர். வழக்குகளில் ஏற்பட்ட சங்கடங்களில் இருந்து விடுதலை கிடைக்கும். தனித்திறமை வெளிப்படும். முயற்சிகள் வெற்றி அடையும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை குடும்ப ஸ்தானமான 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் சங்கடங்களை விலக்கி வைப்பார். பணவரவு அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்ப்பு நீங்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு உண்டாகும். வியாபாரம், தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய முயற்சி வெற்றி பெறும். உடல்நிலை சீராகும். மே1.2024 இற்கு பிறகு குரு பகவானின் சஞ்சாரம் 3, 4 ஆம் இடத்திற்கு வருவதால் அதன் பிறகு எதிர்பார்ப்பு இழுபறியாகும். நன்றாகப் பழகியவர்களும் உங்களை விட்டு விலகிச் செல்வர். உடல், மன நிலையில் பாதிப்பு உண்டாகும். உறவுகளுடன் பிரச்சினைகள் தோன்றும்.

**பொதுப்பலன்**

விரய சனியின் காலம் என்றாலும் ஏப்.30. 2024 வரை 2ஆம் இட குருவும் ஏப்.26.2025 இற்கு பிறகு 6ஆம் இட கேதுவும் நன்மைகளை அதிகரிப்பர். விரயச்சனியின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பார்கள். முயற்சிகள் வெற்றியாகும். நெருக்கடி விலகும். பணவரவில் இருந்த தடை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். வழக்கு விவகாரங்களில் சாதகம் ஏற்படும். வெளிநாட்டு முயற்சி ஆதாயம் தரும். தொலைந்து போன பொருள் கிடைக்கும். உங்கள் மதிப்பு உயரும்.

**தொழில்**

தொழிலில் அக்கறை அதிகரிக்கும். கடந்த கால அனுபவத்தைக் கொண்டு தொழிலில் வெற்றியடைவீர்கள். பண முதலீட்டில் லாபம் கிடைக்கும். சிலர் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவர். உங்கள் புத்திசாலித்தனம் லாபத்தை ஏற்படுத்தும்.

**கல்வி**

தேவையற்ற சிந்தனைகள் தோன்றும். படிப்பில் கவனம் சிதறும் என்பதால் எதிர்காலத்தை மனதில் வைத்து ஆசிரியர்களின் ஆலோசனைய்ய ஏற்று படிப்பில் கவனம் செலுத்தினால் பொதுத் தேர்வில் வெற்றி கிடைக்கும். பரிகாரம் புதன் பகவானுக்கு அர்ச்சனை செய்வதும், சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தானம் அளிப்பதும் நன்மை தரும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பரலங்காய் என்னும் இயற்கையுணவு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


எமது உணவில் அதிகம் பயன்படுத்தாத காய்கள் கனிகள் என பலவகையானவை எம்மூரிலுண்டு. இவை இயற்கையாக மற்றும் பயிரிடுவதன் மூலம் நாம் இலகுவில் எமது அன்றாட தேவைக்காக பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வப்போது எமது தேவைக்காக பயன்படுத்துவதோடு சரி ஆனால் இவற்றின் பெறுமதி தெரிந்தால் எமது உணவில் அதிகளவில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பிருக்கின்றதல்லவா. வெறுமனே கனியாக அல்லது காயாக அல்லாது இவற்றில் செறிந்திருக்கும் ஊட்டச்சத்தினை அவதானித்தால் எமது தேகாரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டுவனவாகவும் இவை அமைந்துவிடுகின்றன. இந்த வகையில் பல காய்களும் கனிகளும் எமக்காகவே இயற்கை தந்து வைத்திருக்கின்றது. அவற்றினை இனங்கண்டு பயன்படுத்தும் போது அவற்றிற்கானபெறுமதியும் அதிகரிக்கும்.

**அம்பரலங்கா** (*Spondiasdulsis*) எமது நாடடில், இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் ஜமைக்கா தீவுகளில் வளர்க்கப்படுகின்றது. இதனது கனி நார்ச்சத்துடன் சேர்த்து ஊட்டச்சத்து அதிகமானதாகவும் காணப்படுகின்றது. அம்பரலாங்காய் செங்காயாகவும் பழுத்தபழமாகவும் உணவாக்கிக் கொள்ளலாம். இதற்கு கோல்டன் அப்பிள் (Golden apple) எனவும் ஜூபிளம்ஸ் எனவும் அழைக்கப்படுகின்றது.

எம்மூரில் எமது வீட்டுத் தோட்டங்களில் இலகுவாக வளரக்கூடிய பல்லாண்டு வாழும் நடுத்தர உயரமுடைய மரமாக வளரக் கூடியது. அம்பரலங்காய் பழுத்திராத போது பச்சையாகவும், கடினத் தன்மையுடையதாகவும் அவற்றுடன் கடித்துண்ணுவதற்கு ஏற்ற அம்சங்களைக் கொண்டு ஒரு வகை கயர்ப்புத் தன்மையுடையதாக இருக்கும். காய் கனிந்து வரும் போது மஞ்சள் நிறமுடையதாகவும் அதிகளவில் பழச்சாற்றைக் கொண்டதாக மாற்றம் பெறும். இப் பழச்சாற்றை அன்னாசி போன்றவற்றுடன் கலந்து உணவாக்குவார்கள். அம்பரலங்காவை உணவாக உட் கொள்வதனால் இதயம், குடல், கண், மற்றும் தோல் ஆகியனவற்றின் செயற்பாட்டுடன் இணைந்திருப்பதுடன் உடலுக்கு தேவையான நோயெதிர்ப்பு தொகுதியை இயக்குவதாகவும் அறியப்பட்டுள்ளது.

அம்பரலங்கா பழங்களை நன்றாக நீரில் கழுவி அதிலுள்ள அழுக்குகளை அகற்றிவிட்டு அப்படியே அதனை கடித்து உணவாக்கலாம். அல்லது சிறிய துண்டுகளாக்கியும் உணவாக்கலாம். அதிகளவில் ஊட்டச்சத்தினைக் கொண்டிருப்பதனால் இவற்றின் பழங்களிலிருந்து ஜாம், ஜெலி மற்றும் ஏனைய சுவையான உணவுகளையும் தயாரிக்கலாம். சிலர் இப்பழங்களின் துண்டுகளை மிளகாய்த்தூள் மற்றும் உப்பு தடவி அதனது கைப்புத்தன்மையை அகற்றிவிட்டு உணவாக்கலாம். இவற்றின் காய்களை துண்டுகளாக்கி ஊறுகாய் மற்றும் ஜெலி என்பனவற்றையும் தயாரித்துக் கொள்ளலாம். அத்துடன் சற்று உவர்ப்புத் தன்மையுடைய கூழ் (soups) மற்றும் சுவைக்கூட்டும் (Sauces) தயாரிக்கலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



அம்பரலங்காவின் இளம் இலைகளை காயுடன் சேர்த்து அவித்து இலைக்கறியாக உணவாக்கலாம். முற்றிய இலைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஏனைய உள்ளீடுகளுடன் சேர்த்து சலாட் தயாரிக்க பயன்படுத்தலாம். சலாட் இனது சுவையை அதிகரிக்க வேண்டியளவு சரக்கு வகைகளை சேர்த்துக் கொள்ளலாம்.

அம்பரலங்காயிலுள்ள ஊட்டச்சத்து எமக்கான தேவையை பூர்த்தி செய்வதாக அமைந்திருக்கின்றது. ஒரு அம்பரலங்கா பழத்தில் ஏறக்குறைய 69.12 கிலோ கலோரி சக்திப் பெறுமானமும், 0.45 சதவீதம் புரதமும், 16.65 சதவீதம் காபோவைதரேற்றும் 3 மில்லி கிராம் இரும்புச் சத்தும், 22 கிராம் பொசுபரசும், தேவையானளவு செமிபாடடையும் நார்ச்சத்தும் 0.08 சதவீதம் கொழுப்புச் சத்தும், கிலோவுக்கு 3018 மில்லிகிராம் சோடியம், 344 மில்லி கிராம் பொட்டாசியம் 94.7 மில்லி கிராம் கல்சியம் என்பனவற்றுடன் விற்றமின் ஏ.பி,மற்றும் சீ என்பனவும் இருக்கின்றன.

சுகாதார நன்மைகளாக அம்பரலங்காவின் பழங்களில் இலைகளில் இயற்கையான அன்ரி ஒட்சிடென்கள் (antioxidants) காணப்படுகின்றன. அதனுடன் நுண்ணங்கியெதிர்ப்புக்குரிய (antimicrobial) காரணிக[illegible] உடலில் [illegible] நோய்த் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கவும் குறிப்பாக புற்றுநோய் கலங்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தும் வல்லமையுடையதாக காணப்படுகின்றது. அம்பரலங்காயில் உள்ள விற்றமின் சீயினால் அதனை உணவாக்கும் போது எமக்கு கிடைக்கும் நன்மைகள் பல. குறிப்பாக அனீமியா உள்ளவர்களுக்கு அதிலிருந்துவிடுபட இரும்புச்சத்தை அகத்துறுஞ்சும் செயன்முறையை மேன்மைப்படுத்துதல், கலங்களின் அழிவிலிருந்து பாதுகாத்தல், அதிகம் களைப்புத்தன்மை ஏற்பட்டபின் அதிலிருந்து விடுபட உடலை சமனடைய வைக்க உதவும், குருதிகட்டியாதலை கரைக்கும் தன்மையுடையதால் மூளைக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்களை தவிர்ப்பதன் மூலம் இதய நோய் மற்றும் பக்கவாதம் அல்லது பாரிசவாதம் (Stroke) போன்ற நோய்களிலிருந்து விடுபட, கொலாஜன் இனது உற்பத்தியை தூண்டுவதனால் காயங்கள் ஆறுவதற்கும் அதிலிருந்து வேறு சேதங்கள் தோலில் ஏற்படாமல் தடுப்பதற்கும் இது உதவுகின்றது.

இவற்றைவிட அம்பரலங்காவினை உட்கொள்வதனால் ஏற்படும் பிற நன்மைகளாக சமிபாடடைவதிலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அதாவது இப்பழத்திலுள்ள நீர்த் தன்மை மற்றும் நார்த் தன்மை நீர்ப்போக்கு (Hydration) ஏற்படாமல் தடுப்பதற்கும் வயிற்றிலுள்ள அழுக்குகள் அகற்றப்படவும் அதன்மூலம் மலச்சிக்கல் (Constipation) ஏற்படாமல் தடுக்கவும் வழியுண்டாகின்றது. மலம் நீர்த் தன்மையாக வெளியேற்றப்படுவதனை தடுக்க நார்த்தன்மை அவசியமாகின்றது. அவ்வாறான நார்த் தன்மை உடைய பழமாக அம்பரலங்கா காணப்படுவதனால் இதனை உண்பதனால் மலம் இறுக்கமாக கட்டியாக வெளியேறும். இவற்றுக்கு [illegible] இதிலுள்ள நார்ச்சத்து குருதியில் அழுக்கம் மற்றும் கொலஸ்திரோல் என்பனவற்றை கட்டுப்படுத்தவும் பயன்படுகின்றது. நீரிழிவுநோயாளர்களில் இன்சுலின் எதிர்ப்பு தன்மை உருவாவதனை நார்ச்சத்து தடுக்கின்றது. மேலும் இக் கனியிலுள்ள நார்ப்பொருளின் அளவு அதிகமாக காணப்படுவதனால் உள சுகாதாரத்தை பேணவும் அதன் மூலம் மனச்சோர்வு ஏற்படாமல் தடுக்கவும் வழிகிடைக்கின்றது.

அம்பரலங்காவின் இலைகள் மற்றும் தண்டின் வெளித் தோல் என்பன அழற்சி (inflamation) என்பனவற்றை ஆற்றுவதற்கு பயன்படுகின்றன. மேலும் சீதபேதி அல்லது இரத்தக்கழித்தல், குடல் அழற்சி மற்றும் குரல்வளை அழற்சி என்பனவற்றை கட்டுப்படுத்தவும் பயன்படுகின்றன. இதிலுள்ள அதிகளவிலான விற்றமின் ஏ கண்பார்வை அதிகரிப்பு நன்மையுடையதாக இருக்கின்றது. குறிப்பாக இரவுக் குருடாதல் நோயைகட்டுப்படுத்துவதற்கு இதனது பழங்களும் இலைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதிலுள்ளவிற்றமின் சீயானது விரைந்து முதிர்வடைதலை தவிர்க்கின்றது.

இதில் காணப்படும் அன்ரி ஒட்சிடென்கள் புகைபிடித்தலால் மற்றும் சூரிய ஒளியினாலேற்படும் விரைந்த முதுமை என்பனவற்றை தவிர்க்கும். மேலும் பற்களினுடைய சுகாதாரத்திற்கும் எலும்புகளின் தேகாரோக்கியத்திற்கும் இதிலுள்ள கல்சியம் மற்றும் பொசுபரசு என்பன உதவுகின்றன.

இதனை பயன்படுத்தும் போது சிறு நீர்க்கழித்தல் அதிகமாக இருப்பதால் கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்ப காலத்தில் இதனை உணவாக்குதலை அவசியம் தவிர்க்க வேண்டும்.

ஒவ்வொரு தாவரத் திற்கும் நன்மைகளும் தீமை களும் இருக்கின்ற படியால் நாம் அவசியம் இவை பற்றி அறிந்து பயன்படுத்துதல் அவசியமாகும்.

மேற்கூறிய இன்னோரன்ன பயன்பாடுடைய அம்பரலங்காவினை நாம் வளர்த்து உணவாக்கிக் கொள்ளலாம். அதே நேரத்தில் இதனை வளர்த்து சந்தைப்படுத்துவதன் மூலம் ஏனையவர்களும் வாங்கிப யன்படுத்துவதற்கு ஏதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 368





"என்ன, தம்பி! சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறாய்! ஒரு கை கொடுக்கக் கூடாதா!" என்ற குரலைக் கேட்டதும் வந்தியத்தேவனுக்கு ஒரு தரம் தூக்கிவாரிப்போட்டது.

அதிசயத்தினால் தள்ளாடி விழாமல் குரல் வந்த இடத்தை நோக்கினான். யானை விழுந்த வழியை யொட்டினாற்போல் செங்குத்தான பாறை யோரத்தில் ஒரு மரத்தின் ஆணி வேரைப் பிடித்துக்கொண்டு ஆழ்வார்க்கடியான் தொங்கிக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனுடைய குதூகலத்துக்குக் கேட்கவேணுமா? உடனே வேடிக்கைப் பேச்சும் வந்துவிட்டது.

"ஓஹோஹோ! வைஷ்ணவரே! கஜேந்திரனுக்கு மட்டும் மோட்சத்தை அளித்துவிட்டு நீர் திரிசங்கு சொர்க்கத்தில் தங்கிவிட்டீரே?" என்று சொல்லிக் கொண்டே, வீரர்களைக் கைதட்டி அழைத்தான்.

தன் அரையில் சுற்றியிருந்த துணிச்சுருளை அவிழ்த்து எடுத்து ஒரு முனையை இரு வீரர்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்தான். இன்னொரு முனையைக் கீழே விட்டதும் ஆழ்வார்க்கடியான் மரத்தின் வேரை விட்டுவிட்டுத் துணிச்சுருளைப் பிடித்துக் கொண்டான். மூன்று பேருமாகப் பிடித்து இழுத்து உன்பாடு என்பாடு என்று அந்த வைஷ்ணவனை மெதுவாக மேலே கொண்டுவந்து சேர்த்தார்கள்.

சிறிது நேரம் வரையில் ஆழ்வார்க்கடியான் நெடிய பெரு மூச்சுவிட்டுக் கொண்டு பிரக்ஞையற்றவன் போலப் படுத்துக் கிடந்தான். மற்றவர்கள் அவனைச் சூழ்ந்து நின்று ஆசுவாசப் படுத்தினார்கள்.

சட்டென்று எழுந்து உட்கார்ந்து, "கிளம்புங்கள்! நன்றாய் இருட்டுவதற்குள் இராஜ பாட்டைக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். என் தலைக் குட்டை எங்கே? தடி எங்கே?" என்று கேட்டான்.

"ஒன்றும் அவசரமில்லை, நீர் இன்னும் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக்கொள்ளும். பிறகு நாம் புறப்படலாம்" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

அப்போது ஒரு நரி ஊளையிடும் சப்தம் கேட்டது. இன்னொரு பக்கத்தில் இன்னொரு நரி தன் இனிய கீதத்தை ஆரம்பித்தது. நூறு இருநூறு நரிகள் கோஷ்டி கானம் இசைத்தன. மேட்டுப் பிரதேசமாயிருந்த காட்டிலிருந்து கீழே பள்ளத்தை நோக்கிப் பல இடங்களில் சலசலப்புப் பிரயாணங்கள் ஏற்பட்டன. புதர்களில் மறைந்து செல்லும் சிறுத்தைகளே அச்சலசலப்புக்களுக்குக் காரணம் என்று சொல்லித் தெரிய வேண்டிய அவசியமிருக்கவில்லை. பள்ளத்தில் மேலே கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடத் தொடங்கின.

"யானையின் மரணம் என்பது சாதாரண விஷயமல்ல. சுற்றுப் பக்கம் வெகுதூரத்திலிருந்தெல்லாம் ஊன் தின்னும் மிருகங்களும், பட்சிகளும் சற்று நேரத்துக்கெல்லாம் கஜேந்திரனுடைய உடலைப் பட்சிப்பதற்காக வந்துவிடும். நாமும் அவற்றுக்குப் பட்சணமாகி விடுவோம். புறப்படுங்கள் உடனே!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவன் கூறியதை வந்தியத்தேவன் இப்போது மறுத்துப் பேசவில்லை. நால்வரும் காட்டுவழியில் எவ்வளவு துரிதமாகப் போக முடியுமோ அவ்வளவு துரிதமாகச் சென்றார்கள். அஸ்தமிக்கும் சமயத்துக்கு இராஜ பாட்டையை அடைந்தார்கள்.

இராஜபாட்டையில் வருவோரும் போவோரும், வண்டிகளும் வாகனங்களுமாக ஒரே கலகலப்பாக இருந்தது. யானைகளின் மீது சர்வசாதாரணமாக ஏறி வருகிறவர்களைப் பார்த்து வந்தியத்தேவன் வியப்புற்றான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## விலை மதிப்புள்ள பொருள்

(நேற்றைய தொடர்ச்சி)



தன்னுடைய விளையாட்டு இப்படி வினையாகும் என்று சற்றும் எதிர்பாராத பேகம் துடிதுடித்துப் போனாள். ஏதோகோபத்தில் கூறிவிட்டாரென்றும், விரைவில் அவர் கோபம் தணிந்து விடுமென்றும் தன்னை சமாதானம் செய்து கொண்டாள்.

ஆனால், அன்றிரவு அக்பர் அவளைத்தேடி அந்தப்புரத்திற்கு வரவேயில்லை. 'ஐயோ, விஷயம் விபரீதமாகி விட்டதே!' என்று பதை பதைத்துப் போன பேகம், மறுநாள் தன் தாதி மூலம் "நான் உங்களுடைய மனத்தை என் கேலிப்பேச்சினால் புண்படுத்தியதற்கு மிகவும் வருந்துகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்று கடிதம் எழுதிஅனுப்பினாள்.

ஆனால், அக்பர் "உங்கள் பேகத்தைப் பெட்டி, படுக்கைகளுடன் நாளையே கிளம்பச் சொல்!" என்று இரக்கமின்றி பதில் சொல்லி அனுப்பினார். அதைக் கேட்டு இடி விழுந்தது போலான பேகம், அளவற்ற கோபமடைந்த தன் கணவரை எப்படி சமாதானப்படுத்துவது என்று வழி தெரியாமல் தவித்தாள். கடைசியில் அவளுக்கு பீர்பால் ஞாபகம் வர, அவரை உடனே வரவழைத்தாள்.

உடனே பேகத்தைத் தேடிவந்த பீர்பால் அவள் முன்னிலையில் வணக்கம் தெரிவித்தபின் தன்னை அழைத்தக் காரணம் கேட்க, பேகம் கண்களில் நீர் [illegible] தளும்ப நடந்த விஷயத்தைக் கூறியவுடன் "நான் சொல்வதை அப்படியே செய்யுங்கள்! உங்கள் பிரச்சினை தீர்ந்து விடும்!" என்று பீர்பால் பேகத்திற்கு தைரியம் கூறிவிட்டு வீடு திரும்பினார்.

உடனே பீர்பாலின் யோசனைப்படி, தன் பொருள்களை எடுத்துப் பெட்டியில்வைத்துக் கொள்ளத் தொடங்கினாள். தன்னுடையது மட்டுமின்றி, அக்பரின் பொருள்களையும் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

பிறகு தன் தாதி மூலம் அக்பருக்கு, "பிரபு! நான் பிறந்த வீடு செல்லத் தயாராகி விட்டேன். ஆனால், போவதற்கு முன் உங்களை ஒரேயொரு முறை சந்தித்து மன்னிப்புக் கோர விரும்புகிறேன்" என்று செய்தி அனுப்பினாள்.

அதற்கு சம்மதித்த அக்பர், ஒரு மணி நேரம் சென்றபின் அந்தப்புரத்தை அடைந்தார். அவரை வாயிலில் நின்று புன்னகையுடன் வரவேற்ற பேகம் அவருக்கு இருக்கையளித்து உபசரித்தாள். ஆனால், அவளுடைய உபசரிப்பை அலட்சியம் செய்த அக்பர், கடுமையான குரலில் "நீ எப்போது போகப் போகிறாய் என்று மட்டும் சொல்!" என்றார். "இதோ கிளம்பிக் கொண்டே இருக்கிறேன். ஆனால், போவதற்கு முன், நான் இதுவரை உங்கள் மனத்தைப் புண்படுத்திய அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மன்னிப்புக் கேட்கிறேன். மன்னித்தேன் என்று உங்கள் வாயினால் கேட்ட பின்னரே, என்னால் நிம்மதியாகப் பிறந்த வீடு செல்ல முடியும்" என்று பேகம் உருகினாள்.

"சரி, மன்னித்து விட்டேன்! இப்போது புறப்படுகிறாயா?" என்று வேண்டா வெறுப்புடன் கூறிய அக்பர் எழுந்து செல்லத் தயாரானார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.
> ~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களைக் கொன்று எங்களைக் காக்கும் சிங்கராஜா

முயலார் முயலுகிறார் என்பது குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் சிறுவர் நாடகம்.

காட்டு ராஜா சிங்கத்துக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்குகள் உணவுக்காகச் செல்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது.

மான், மரை, முயல் என்ற வரிசையில் சிங்கத்துக்கான இரை தீர்மானிக்கப்படுகிறது.

இம்முறை சிங்கத்தின் இரையாக முயல் செல்ல வேண்டும்.

நடுங்கி ஒடுங்கி சிங்கத்திடம் செல்கின்ற முயல் சிங்கத்தைப் பார்த்து பின்வருமாறு பாடுகிறது.

*"...எங்களைக் கொன்று எங்களைக் காக்கும் சிங்கராஜா..."*

இந்தப் பாடல் சிங்கத்திடம் இருந்து தப்புவதற்காக முயல் எடுத்த முயற்சி.

இங்கு எங்களைக் கொன்று எங்களைக் காக்கும் சிங்கராஜா என்பதற்குள் இருக்கக்கூடிய கருத்தாழம் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது ராஜா என்றால் அங்கு பாதுகாத்தல், காப்பாற்றுதல் என்ற இராஜகாரியம் வந்துவிடும்.

ஆக, காட்டின் ராஜா சிங்கம் என்றால், சிங்கத்தின் கடமை ஏனைய காட்டு விலங்குகளைக் காப்பாற்றுவதாகும்.

ஆனால் இங்கோ சிங்கம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்குகளைக் கொன்று புசிக்கிறது.

இங்குதான் சிங்கத்தின் மிக மோசமான காரியம் உணர்த்தப்படுகிறது.

ஆம், நாடறிந்த நாடக ஆசிரியர் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் மேற்போந்த முயலார் முயலுகிறார் என்ற சிறுவர் நாடகத்துக்குள் இருக்கக்கூடிய உட்பொருளை இன்றைய சமகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

அதோ வற்வரிச் சுமை காரணமாக அனைத்துப் பொருட்கள் சேவைகளின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

இந்த மோசமான வரி விதிப்பால் ஏழை மக்களின் நாளாந்த சீவியம் கேள்விக்குறியாகியுள்ளது.

பலர் ஒரு நேர உணவுக்குக்கூடத் திண்டாடுகின்ற அவலத்துக்கு ஆளாகியுள்ளனர்.

வரி விதிப்பின் விளைவாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இதற்கு அரசாங்கம் கூறுகின்ற விளக்கம் மக்களைக் காப்பாற்றுவதற்காகவே வரி அறவிடுகிறோம் என்பதாக இருக்கிறது.

இங்குதான் எங்களைக் கொன்று எங்களைக் காப்பாற்றும் சிங்கராஜா என்ற முயலாரின் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

என்ன செய்வது மக்களைக் கொன்று மக்களைக் காப்பாற்றுகின்ற அளவில் இலங்கையின் நிலைமை வந்துவிட்டது.

இனி இந்த நாட்டில் பஞ்சம் பசி தலைவிரித்தாடும். வறுமை கோலோச்சும். யாசிப்பவர்கள் அதிகரிப்பர். வழிப்பறிக் கொள்ளைகள், களவுகள் தாராளமாக நடக்கும்.

பரவாயில்லை. எங்களைக் கொன்று எங்களைக் காப்பாற்றும் அரச வரித்திட்டம் நடக்கட்டும்.

# யாழில் பழுதடைந்த உருளைக்கிழங்கை கிளிநொச்சியில் புதைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை கிளிநொச்சிவனவளத்திணைக்களத்திற்கு சொந்தமான காட்டுப்பகுதியில் உரிய நடைமுறைகளை பின்பற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளானமையினால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்களத் தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உருளைக்கிழங்கு விதைகளை பொலீத்தினில் பொதி செய்து பாதுகாப்பாக களஞ்சியசாலையில் இருந்து அகற்றிபாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதனை அடுத்து கிளிநொச்சி பகுதியில் உள்ள காட்டு பகுதியில் அவற்றை புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கோ விவசாயிகளுக்கோ மண்ணுக்கோ நிலத்தடி நீருக்கோ பாதிப்பு ஏற்படாது என துறைசார் தரப்புகள் தெரிவிக்கின்றன. (ம-7,33)

# உடுப்பிட்டியில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு எதிராக

## கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு

(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியிலுள்ள மதுபானசாலைக்கு எதிராக கடையடைப்பு போராட்டம் மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீள திறக்கப்பட்ட மதுபானசாலையினால் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை உடனடியாக அகற்றக்கோரி இன்று புதன்கிழமை(03) காலையில் இருந்து மதியம் வரை உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைகளை பூட்டி கடையடைப்பிற்கு உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் ஒன்றாக சேர்ந்து அழைப்புவிடுத்துள்ளது.

வணிக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் சந்தை வியாபாரிகள் அனைவரும் இதற்கான ஆதரவை தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டன ஆர்ப்பாட்டமும் உடுப்பிட்டி சந்தியில் இருந்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

சமூக அக்கறை உள்ளவர்கள், அரசியல் தலைவர்கள் அனைவரையும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு தருமாறு உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன. (ம-7,33,60)

# உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளை (04) ஆரம்பமாகவுள்ளது.

மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு வருவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளும் செய்யப்படும் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிலவும் மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக கெக்கிராவ மடாட்டுகம ரேவத வித்தியாலயத்திற்கான பரீட்சை மத்திய நிலையத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தினூடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியுமென திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வாய், மூக்கில் நுரைவெளியேறி

# கனடா பிரஜை யாழில் உயிரிழப்பு

(கரணவாய்)

வாய் மற்றும் மூக்கில் இருந்து நுரை வெளியேறிய நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கனடா பிரஜை ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கனடா மொன்றியலைச் சேர்ந்தவரும் தற்போது ரேவடி ஒழுங்கை, வல்வெட்டித்துறையில் வசித்து வருபவருமான வேலுப்பிள்ளை நந்தகுமார் (வயது- 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 40 வருடமாக கனடாவில் வசித்து வந்த அவர் அங்கு குளிர்காலப் பகுதியில் இலங்கைக்கு வந்து தங்கிவிட்டு பின்னர் செல்வதாகவும் அவ்வாறு தற்போதும் இலங்கைக்கு வந்து வல்வெட்டித்துறையில் தங்கி இருந்த வேளை கடந்த 29ஆம் திகதி இரவு வாய் மற்றும் மூக்கில் இருந்து நுரை வெளியேறிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9. 15 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பருத்தித்துறையில்

# வாந்தி எடுத்த பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வயோதிப பெண் ஒருவர் இடை வழியில் உயிரிழந்துள்ளார்.

இரண்டாம் குறுக்குத் தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த அன்னமலர் தருமராசா (வயது- 69) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (02) அதிகாலை வாந்தி எடுத்த நிலையில் உடல் சோர்வாக இருப்பதாக தெரிவித்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அவர் இடை வழியில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)



02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கம்சபாக்களின் தீர்ப்புக்களினின்று மாகாண முகவர்களுக்கு மனுச்செய்ய அதிகாரமும் வழங்கப்பட்டது. இப்புதுச் சட்டம் அமுல் செய்யப்பட்டதன் பேறாக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்தன. நாளடைவில் கம்சபாமுறை பிரித்தானிய நீதி பரிபாலன உள்ளூர் நிருவாக விடயங்களில் முக்கிய இடம் பெறலாயிற்று.

### அன்றில் இருந்து இன்று வரை உள்ளூராட்சி நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

புராதன காலத்தில் வழமையிலிருந்த முறைமை எளியனவாகவும் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டனவாகவும் காணப்பட்டன. இம்முறைமை சமூக செயற்பாடுகள் பலவற்றைக் கவனிக்கும் கிராமத்துத் தலைவர்தளைக் கொண்டதாயிருந்தது. 1681 ஆம் ஆண்டில் ராபர்ட் நொக்ஸ் என்பவர் இலங்கையின் கிராம நிர்வாகத்தை கம்சபா மூலம் விவரித்திருந்தார். ஒவ்வொரு தலைமை வீட்டுக்காரரும் கம்சபாவில் உறுப்பினராக இருந்தனர்.

கம்சபாவில் தீர்க்கப்படாத முறையீடுகள் ரட்டசபாவிற்கு அனுப்பப்பட்டது. ரட்டசபா அரச அலுவலர்களைக் கொண்ட ஒரு சபையாகும். இக்கிராமத்து அமைப்பு குடிமக்களது உள்ளூர் தொழிற்பாடுகள் பலதரப்பட்டவற்றை பொறுப் பேற்றமையால் மத்திய அரசின் சில பொறுப்புக்கள் குறைந்தன. இந் நிறுவனங்கள் வழமையான சட்டத்திற்கேற்ப ஏகமனதாக தீர்மானங்கள் எடுக்கக்கூடிய சுதந்திரத்தைப் பெற்றிருந்தன.

போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக் காலங்களின் போது இந்த அதிகாரப் பரவலாக்கம் ஏற்கெனவே இருந்தவாறு தொடரப்பட்ட போதும், பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அடிப்படையான விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1818 ஆம் ஆண்டில், மலைநாட்டு வெளிப்படுத்துகைப் பிரகாரம் பிரித்தானிய அரசாங்கம் கிராமசபை (கம்சபா) முறையை இல்லாதொழித்து புதிய நிருவாக முறையையும் நீதிமன்ற முறையையும் அறிமுகப்படுத்தியது.

1818 இல் இலங்கையின் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கிராம சபைகள் ஒழிக்கப்பட்டன. 1833 ஆம் ஆண்டின் கோல்ப்ரூக்-கேமரூன் கமிஷன் சில வகையான கிராமக் குழு அமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1856 ஆம் ஆண்டின் நெல் நிலங்கள் மற்றும் 5 நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் இல.9 விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேற்பார்வையிட கிராம சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. கிராம சபைகளுக்கு பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபர் தலைமை தாங்கினார். அவர் கிராம சபைகளின் மற்ற உறுப்பினர்களை நியமித்தார்.

உள்ளூர் அரசாங்கம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல முன்னேற்றங்களைக் கண்டது. 1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வீதிக் குழுக்கள் சட்டம் நாட்டின் பொது வீதிகளை நிர்வகிப்பதற்கு மாகாண வீதிக் குழுக்கள் மற்றும் மாவட்ட வீதிக் குழுக்களை உருவாக்கியது. குழுக்களில் அரசு அதிகாரிகள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். வீதிக் குழுக்கள் 1861 மற்றும் 1951க்கு இடையில் செயல்பட்டன. அவற்றின் செயல்பாடுகள் பொதுவேலைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.

### 1865ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

சில உள்ளூர் நிர்வாகத்திற்கான பொறுப்பை உள்ளூர் குடியிருப்பாளர்களுக்கு மாற்றியது. மாநகர சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப் பினர்களைக் கொண்டிருந்தன. கட்டளைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கண்டி மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன. 1931 இல் இயற்றப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாக மாநகர சபைகள் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இச் சட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது என்னவென்றால் வாக்குமூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் தேர்தலில் முன்மொழியப்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட சபைக்கு அரசாங்கத்தின் குறிப்பிட்ட சில அதிகாரங்களை கையளிப்பதாகும். மாநகர சபை வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம சமூகங்கள் கட்டளைச் சட்டம்

உள்ளூர் நிர்வாகத்திற்கான கிராமக் குழுக்களையும் நீதி நிர்வாகத்திற்காக கிராமப்புற நீதிமன்றங்களையும் அறிமுகப்படுத்தியது. உள்ளூர்வாசிகளின் கோரிக்கையின் பேரில் ஒரு கிராமக் குழுவை உருவாக்க ஆளுநரும் சட்ட மேலைவையும் அனுமதித்தது. அரசாங்க அதிபர் தலைமையில் கிராமக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். கிராமக் குழுக்கள் கிராம சபைகளைப் போலவே இருந்தன.

கிராமக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டன, 1938 இல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன, அவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும், தலைவர் மற்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படவும், வட்டாரங்களை உருவாக்கவும், உள்ளூர் தலைவர்கள் உறுப்பினர்களாக இருப்பதை தவிர்க்கவும் அனுமதித்தது.

கிராமக் குழுக்கள் நில வரி வசூலிக்கலாம் மற்றும் பொதுத் தேவைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளான வீதிகள், நீர் வழங்கல், பொது வசதிகள் மற்றும் பொது சுகாதாரம் போன்ற உள்ளூர் சேவைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

### 1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேனல் சபை கட்டளைச் சட்டம்

மின்சாரம், வடிகால், பொது வசதிகள், சந்தைகள், பால் பண்ணைகள், சலவை நிலையங்கள் மற்றும் சிறு நகரங்களில் நீர் வழங்கல் போன்ற பல பொது சுகாதார சேவைகளை வழங்குவதற்காக அமைப்புகளை உருவாக்கியது. சுகாதார சபைகள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்டிருந்தன.

### 1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டம்

பெரிய நகரங்களுக்கு உள்ளூர் சுகாதாரம் மற்றும் சுகாதார சபைகளை உருவாக்கியது. அவற்றின் அமைப்பு மற்றும் அதிகாரங்கள் (சிறு நகரங்களுக்கு உருவாக்கப் பட்ட) சுகாதார சபைகளைப் போலவே இருந்தன. உத்தியோக பூர்வமான உறுப்பினர்கள் தவிர தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர் குழுவும் இதில் உள்ளடக்கப்பட்டு இருந்தனர்.

உள்ளூர் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் பேனல் சபைகள் 1 செப்டம்பர் 1899 இல் செயல்படத் தொடங்கின.

### 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டம்

இச் சட்டத்தின் மூலம் மாநகர சபைகள் அல்லாத ஏனைய பிரதேசங்களுக்கென "மாவட்ட சபை" எனப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது. நகர மாவட்ட சபைகள் , பொது மாவட்ட சபைகள், கிராமிய மாவட்ட சபைகள் என மூன்று வகையான மாவட்ட சபைகள் இச் சட்டத்தின் மூலம் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

முந்தைய உள்2ர் அதிகாரிகள் பெரும்பாலும் நியமிக்கப்பட்டனர் ஆனால் இந்த புதிய அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரண்டு UDCகள் 1922 இல் உருவாக்கப்பட்டன, மேலும் ஆறு 1923 இல் உருவாக்கப்பட்டன.

### 1924 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கிராமிய பிரசைகள் தொடர் பான கட்டளைச் சட்டம்

இச் சட்டத்தின் மூலம் கம்முலாதேனி எனப்படும் கிராமத் தலைவரின் பிரிவு அல்லது ஒரு பகுதியை கிராம சபைப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கான அதிகாரம் ஆளுநருக்கும் குறித்த சபைக்கும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த கிராம சபைப் பிரிவில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களோ உள்ளடங்கும் வகையில் உப பிரிவுகள் அமைக்கப்படுவதன் மூலமும், அப் பிரிவுகள் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படுவதன் மூலமும் 657 கிராமிய செயற்குழுக்கள் நிறுவப்பட்டன.

1924ல் கிராம சபைகளும் , 1939ல் நகர சபைகளும் , 1946ல் பட்டின சபைகளும் உருவாக்கப்பட்டது. இதனால் பெரிய நகரங்கள் நகரசபைகளாகவும், சிறிய நகரங்கள் பட்டின சபைகளாகவும், ஏனைய சபைகள் கிராமசபைகளாகவும் உருவாகின.

1931ஆம் ஆண்டு வரை இச் சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். 1931ன் பின் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மறுசீரமைப்பின் மூலம் சகல உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1936ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபைக்கென தனியானதொரு நியதிச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதுடன் அவ்யாப்பு கண்டி, காலி மாநகர சபைகளில் 1936ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

1941 ஆம் ஆண்டில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபை நியதிச் சட்டம் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனின்...

அதே பகுதியைச் சேர்ந்த 25 வயது டைய றாயூ என்னும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தடையுத்தரவு...

யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்கவுள்ளார். 04ம் திகதி முதல் 07ம் திகதி வரை அவரது விஜயம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான போராட்டத்தை தடுக்கும் பொருட்டு தடை கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில், புதன் கிழமை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## போதைப்...

கட்டளைப் பிரிவு என்ற படையை உருவாக்குவதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்து சட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை உருவாக்கி, பாரியளவிலான கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கான விசேட அதிகாரங்களைக் கொண்ட "தேசிய போதைப்பொருள் எதிர்ப்புக் கட்டளை" பிரிவை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகின்றது.(ம-7)

## குடும்பத்தோடு...

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரி அதிகரிப்பால் பிள்ளைகளுக்கு சரியாக உணவுகளை வழங்கவும், வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யவும் முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவலத்தை மேலும் ஊக்குவிக்கும் ஒரு ஆட்சியே தற்போது உருவாகியுள்ளது. பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் இந்நிலை மேலும் அதிகரித்துள்ளது.

அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வற் வரி அதிகரிக்கப்பட்டாலும், அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க ஒரே வழி வற் வரியை அதிகரிப்பது அல்ல, மாறாக நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தை நாட்டிற்கு திரும்பப் பெறுவதற்கான கட்டமைப்பை ஸ்தாபிப்பதே பொருத்தமான வழி.

திருடர்களை நம்பி ஜனாதிபதி, பிரதமர் போன்ற பதவிகளைப் பெற்றதாலேயே தற்போதைய அரசாங்கத்தால் அதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே, திருடர்களைப் பிடிப்பதற்குப் பதிலாக திருடர்களைப் பாதுகாத்து வரும் வேலையையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தினார்.

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகள் உள்ளிட்ட மருந்துத் துறையில் சமீபத்தில் நடந்த திருட்டு ,ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தபோது, அதனை தோற்கடிக்க 113 உறுப்பினர்கள் கை தூக்கினர்.

அவர்கள் இந்நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற திருடர்கள் கூட்டமே. அவர்கள் திருடிய வளங்களை மீண்டும் எமது நாட்டிற்கு கொண்டு வர முடியுமாக இருந்தால், இவ்வாறு வரியை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் [illegible] னார். (ம-7)

## ஜனாதிபதியின்...

கூட்டங்கள் நடைபெறவுள்ளது. அவ்வேளையில், ஜனாதிபதியிடம் பிரஸ்தாபித்து தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அடையாளப்படுத்தும் நோக்கிலான முன்னோட்ட கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகள் போன்றோர் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடலில், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். (ம-7,33)

## சிலிண்...

கரணம் களஞ்சியப்படுத்தப்பட்ட இடத்திலேயே இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கண்டி உடப்பு சலாவ, பிளயார் லோமன்ட் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் ரவி (வயது-38) மற்றும் வேலாயுதம் புனேஸ்வரம் (வயது-42) ஆகிய இரண்டு குடும்பஸ்தர்களே தீயில் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பர்களுடன் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டுவிட்டு இரவு நித்திரைக்குச் சென்றதாகவும், தீ ஏற்பட்ட வாடியின் அறை திறந்த நிலையிலேயே இருந்துள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷந்தன் பொன்னுத்துரை மற்றும் [illegible] கே. வாசுதேவ ஆகியோர் நேரில் சென்று சம்பவம் இடம்பெற்ற பகுதிகளை பார்வையிட்டனர். சடலங்கள் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## மருந்துகளின்...

சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, இந்த ஆண்டு மருந்து விலை உயர்வு தாங்க முடியாத நெருக்கடியாக மாறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தொற்றாத நோயினால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான நோயாளிகள் மருந்துகளை உட்கொள்வதை நிறுத்தியுள்ளதாகவும், அது ஒரு நாடு என்ற வகையில் பாரதூரமான நிலைமை எனவும் எச்சரித்துள்ளார். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2024.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 0173
Q 4 5 1 2 9 5 Q
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1377
S 01 05 28 70 S
Double Chance 08072

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3589
சீட்டிழுப்பு திகதி 02.01.2024
M 01 10 45 79
M 49981
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 0656
இடபம் 24 31 38 54 இடபம்
56297 15

மஹஜன சம்பத
திகதி 2024/01/02
சீட்டிழுப்பு இலக்கம் 5347
M 9 4 1 5 0 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1695
O 09 04 44 52 66
84739

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
02.01.2024 வெற்றி வாரம் 055 வர்ணம் சிவப்பு
M 1 2 1 8 7 6
81068
25,415,007.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2321 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.02 தினம் செவ்வாய்க்கிழமை
02 06 22 65 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,734,222.40
33027

சனிதா
திகதி 2024.01.02 வெற்றி வாரம் 4482 வர்ணம் பச்சை
15 52 69 74 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,742,301.60
62489

சசிரி
423
2024.01.02
வெற்றி இலக்கங்கள் 13 21 25
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,979,440/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4033 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.02 தினம் செவ்வாய்க்கிழமை
05 10 36 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,201,082/-
565904

ஜயோதய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 21 01 19 22 61
1497
02.01.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 486,996,686.20

செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,531,094.40
வெற்றி வாரம் : 2147
2024.01.02
அட கோடிபதி ADA KOTIPATHI
13 16 38 60 W
831620

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலை ஆதரிப்பதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்

## வஜிர அபேவர்தன எம்.பி

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

ஜனாதிபதிவேட்பாளராக போட்டியிடப்போவதாக தெரிவிப்பவர்களால் நாட்டில் என்ன செய்ய முடியும் என கேட்கிறோம். அத்துடன் யுத்தத்தை வெற்றிகொண்ட மகிந்த ராஜபக்ஷ தற்போது நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிகொள்ளவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகிறார் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

# தமிழ்...

திருச்சி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன முனையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இந்த விழாவில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது "வணக்கம், எனது தமிழ் குடும்பமே, முதலில் உங்கள் அனைவருக்கும் 2024 புத்தாண்டு நல்வாழ்த்துகள்." என தமிழில் கூறி பிரதமர் மோடி பேச்சை துவக்கினார்.

மேலும், இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சி தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாக கருதுகிறேன். தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை.

உலகின் எந்த இடத்திற்கு சென்றாலும் தமிழ் மொழியை புகழாமல் நான் இருந்ததில்லை.

எனக்கு பல தமிழ் நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் இருந்து தமிழ் பண்பாட்டை அறிகிறேன். தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை.

தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்கு உள்ளது. காசி தமிழ்சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18465)

076 825 7716 (ஆகாஸ்)

புதிய தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படுகின்றன

"விடுமுறைக்காலத்தில் அதிக நேரம் புவியியல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு நிறுவனம்"....

A/L - 2025

புவியியல் - N.பாபு

- திங்கள் - 8am - 10am
- புதன் - 11am - 1pm
- வெள்ளி - 8am - 10am
- சனி - 8am - 9am
- ஞாயிறு - 8am - 9am

DMI

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

T.P - 077 936 5087 (18473)

கணக்கீடு

A/L 2024 ஆரம்பம்

paper class, பங்குடமை

A/L 2025 ஆரம்பம்

ஆரம்ப அலகிலிருந்து

ஆசிரியர்

S.தவா

DCM யாழ்நகர் | CCA சுன்னாகம்

NIRU கோண்டாவில்

பிரத்தியேக வகுப்பு கொக்குவில்

T.P:077 239 5858 (18483)

யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு :

+447963743585(Whatsapp)

021 222 7141(Srilanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk (18434)

மருந்தாளர் சேவை

மருந்தாளர் -(வளவாளர்) சேவை, மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர், 25 வருட அனுபவம் முழு நேரம், பகுதி நேரம் (C-8067)

070 258 9370

CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்.

CIMS COLLEGE (C-8070)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777



மருத்துவராவது உங்கள் கனவா?

STUDY MEDICINE (MBBS) IN CHINA

சீனாவுக்கு சென்று மருத்துவம் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.

- இலங்கையால் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
- குறைந்த கற்கைநெறிக் கட்டணம்.
- முழுமையாக ஆங்கில மொழி மூலம் பயிற்சிகள்.

பதிவுகள் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில்

BYF EDUCATION (PVT) LTD.

தொடர்பு : Dr. தேவா (18438)

Mob : 076 764 6888

Tel : 011 588 2896

Whatsapp : 077 2177 995

www.byfedulk.com

byfeducation

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோண்டாவில் புகையிரத நிலையம் அருகில் 2 1/4 பரப்பில் நான்கு அறைகள் இரண்டு கோல்கள் இணைந்த குளியலறை மற்றும் வெளி குளியலறைகளுடன் கூடிய வடக்கு வாசல் (முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டது.)

வீடு விற்பனைக்கு உண்டு. (18479)

077 202 7029

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

0777 554 528 (18357)

யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருடம் அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி வழங்கவுள்ளோம்.

- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலைவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(C-8068)

சிறிராம் ஜுவல்லர்ஸ்

22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

GREEN MEMORIAL HOSPITAL MANIPAY

பணியமர்தல் !

சமூகநல அமைப்பாளர்







திறமையான தொடர்பாடல் மற்றும் கற்பனைத் திறன்மிக்க வலிமையான அணி வீரரைத் தேடுகின்றோம்!

- மாற்றத்திற்கான வேட்கை உடையவராக இருத்தல் வேண்டும்.
- வெற்றிகரமான சமூக வேலைகளில் அனுபவம் வேண்டும்.
- பட்டதாரிகள் விரும்பப்படுவர்.
- நாடக மற்றும் ஆற்றுகைத் திறன்கள் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை கீழுள்ள மின்னஞ்சலுக்கு சமர்ப்பிக்கவும்.

முடிவுத் திகதி : 14 ஆம் நாள் தை 2024

surgerygmh@gmail.com

0770661031 (C-8071)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.